# சட்டவிரோத வியாபாரம்

# அந்நியர்களின் பொருட்கள் பறிமுதல்



கோலாலம்பூர், அக். 26- பாசார் போரோங் கோலாலம்பூரில் அதிரடிச் சோதனை நடத்திய கோலாலம்பூர் மாநகர மன்ற அதிகாரிகள் அந்நியர்கள் வியாபாரம் செய்த பொருட்களைப் பறிமுதல் செய்தனர். 1974ஆம் ஆண்டு சாலை வடிகால் கட்டட சட்டவிதிகள் கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதோடு 2016ஆம் ஆண்டு கோலாலம்பூர் கூட்டரசுப் பிரதேசம் அங்காடி வியாபாரிகள் லைசென்ஸ் சட்டவிதிகள் கீழும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் அறிக்கை கூறியது. பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் ஜாலான் லொம்போங் ஜாலான் பிகார்ஜா செராஸ், கோலாலம்பூரில் உள்ள கிடங்கிற்குக் கொண்டு செல்லப்பட்டது. அந்நியர்கள் சட்டவிரோதமாக வியாபாரம் செய்யும் பகுதிகள் கண்காணிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என அது மேலும் கூறியது.